செ.வெ.எண்.21 நாள்:11.05.2017

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சியின் மூலம் திறந்து வைத்த திருநெல்வேலி நகரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், மற்றும் உள்ளூர் திட்டக்குழும அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார்.**

---

திருநெல்வேலி தெற்கு புறவழிச்சாலை கூர்நோக்கு இல்லம் அருகில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், உள்ளூர் திட்டக் குழும அலுவலகம் ஆகியவைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி மூலம் இன்று (11.05.2017) திறந்து வைத்தாகள். அதனைத்தொடர்ந்து திருநெல்வேலி நகரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் மற்றும் உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார்.

திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் அருகில் தெற்கு புறவழிச் சாலை கூர்நோக்கு இல்லம் முன்புறம் மொத்த 42 செண்ட் நிலப்பரப்பில் தரைத்தளம் 1000 சதுர அடி பரப்பளவிலும், முதல் தளத்தில் நகரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் 5,000 சதுர அடி பரப்பளவிலும், இரண்டாம் தளத்தில் உள்ளூர் திட்டக் குழும அலுவலகம் 5,000 சதுர அடி பரப்பளவிலும் கட்டப்பட்டுள்ளது. மேலும் தரைத்தளத்தில் 14 கார் பார்கிங்கும், ஓட்டுநர் ஓய்வு அறை, காவலர் தங்கும் அறை, மாற்றுத்திறனாளிகள் சாய்வு தளம் உள்ளிட்டவைகளும் கட்டப்பட்டுள்ளது. இவைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திரு.நாகராஜன், உறுப்பினர் செயலர் திரு.வேல்முருகன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திருமதி.ஹேமாவதி, உதவி பொறியாளர்கள் திரு.பீரப்பா, திருமதி.ராஜலட்சுமி மற்றும் நகரமைப்பு துணை இயக்குநர் அலுவலர்கள், உள்ளூர் திட்டக் குழும அலுவலக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.